35

# ஆவியானவர் உள்ளாக வாசம்பண்ணுதல்

## (8:9–11)

*ரோமர் 8:9, 11 வசனங்களில், கிறிஸ்தவர்களுக்குள் பரிசுத்த ஆவியானவர் வாசம்பண்ணுதல் குறித்து மூன்று முறைகள் குறிப்பு ஏற்படுத்தப்பட்டது:*

> *தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல், ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள் ... (வசனம் 9அ).*

> *... இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார் (வசனம் 11).*

*ஆவியானவர் உள்ளாக வாசம்பண்ணுதல் என்பது ஒரு கிறிஸ்தவர் மகிழ்வுடன் அனுபவிக்கும் மற்றும் கிறிஸ்தவரல்லாதவர் அனுபவித்திராத ஒரு ஆசீர்வாதமாக உள்ளது - ஆனால் அது என்னவாக உள்ளது? தேவனுடைய பிள்ளைகளுடன் பரிசுத்த ஆவியானவர் கொண்டுள்ள விசேஷித்த உறவு என்ன? பரிசுத்த ஆவியானவரைப் பற்றியும் கிறிஸ்தவரைப் பற்றியும் கேட்கப்படக்கூடிய ஒவ்வொரு கேள்விக்கும் நாம் பதில் அளிக்க இயலாது, ஆனால் அந்தப் பாடக் கருத்தின்மீது கூறுவதற்குப் புதிய ஏற்பாடு என்னத்தைக் கொண்டுள்ளது என்று மறுபடியும் கண்ணோக்குவதில் மதிப்புள்ளது.*

### பரிசுத்த ஆவியானவர் அருளப்படுதல்

*யோவான் 7:38ல் இயேசு, "வேதவாக்கியம் சொல்லுகிறபடி, என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, 'அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்' [ஏசாயா 44:3]" என்று அறிவித்தார். பின்னர் யோவான், "தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச் சொன்னார். இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை" என்று விளக்கம் அளித்தார் (வசனம் 39). யோவானுடைய விளக்கமானது, விசுவாசிகளுக்கு எதிர்காலத்தில் - இயேசு "மகிமைப்பட்ட" (அவரது மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலுக்கு) பின்பு - பரிசுத்த ஆவி தரப்படவிருந்தார் என்று நமக்குக் கூறுகிறது. பரிசுத்த ஆவியானவர் அருளப்படுதல் என்பது - பழைய ஏற்பாட்டு காலங்களிலுள்ள ஒன்றுடன்*

இணைவுபடுத்தப்படாததாக, ஆனால் கிறிஸ்தவ யுகத்திற்கே உரிய ஒன்றாக இருந்த - ஒரு *புதுவகையான* கொடுத்தலாக இருந்தது என்று யோவானின் குறிப்புரையிலிருந்து நாம் உய்த்துணருகிறோம்.

இயேசு தமது மரணத்திற்கு முன்பு கடைசிமணி வேளைகளின்போது, தாம் இந்த பூமியைவிட்டுச் சென்ற பின்பு, அப்போஸ்தலர்களுக்குப் பரிசுத்த ஆவியானவரை அனுப்பப் போவதாக வாக்குத்தத்தம் செய்திருந்தார் (யோவான் 14:16, 17, 25, 26; 15:26, 27; 16:7-14). ஆவியானவரைப்பற்றி இயேசு கூறியவற்றில் பெரும்பான்மையானவை, பன்னிருவருக்கு நேரடியான மற்றும் தனிப்பட்ட நடைமுறைப் பயன்பாட்டைக் கொண்டிருந்தன (14:26; 16:13ஐக் காணவும்), ஆனால் கிறிஸ்தவ யுகத்தில் தொடர்ந்து நடைபெறும் ஆவியானவரின் ஊழியம் பற்றிய குறிப்புகள் உள்ளன. எடுத்துக்காட்டாக, யோவான் 14:16ல் இயேசு, "நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு[1] தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்'' என்று கூறினார். "தேற்றரவாளன்" என்பது parakletos, என்ற வார்த்தையின் மொழிபெயர்ப்பாக உள்ளது, இது para ("உடன்") மற்றும் kaleo ("அழைக்க") என்பவற்றிலிருந்து உண்டான கூட்டு வார்த்தையாகும். இவ்வாறாகச் சிலவேளைகளில், பரிசுத்த ஆவியானவர் "The Paraklete" என்று குறிப்பிடப்படுகிறார். இவ்வார்த்தை, உதவ, ஊக்கப்படுத்த, பெலப்படுத்த, மற்றும் ஆறுதல்படுத்த, "உடன் அழைக்கப்படும் ஒருவர்" என்பதைக் குறிப்பிடுகிறது. AB வேதாகமத்தில் ["Comforter (Counselor, Helper, Intercessor, Advocate, Strengthener and Standby)"] "ஆறுதல் படுத்துபவர் (ஆற்றுநர், உதவியாளர், வேண்டுதல் செய்பவர், பரிந்துபேசுபவர், பெலப்படுத்துபவர் மற்றும் உடன் நிற்பவர்)" என்றுள்ளது.

இயேசு பரத்துக்கேறின பின்பு, அவர் யூதர்களின் பண்டிகை நாளான பெந்தெகொஸ்தே நாளன்று அப்போஸ்தலர்கள் மீது பரிசுத்த ஆவியானவரை ஊற்றினார் (நடபடிகள் 1:9; 2:1-4, 33ஐக் காணவும்). மிகப்பழைய விளக்கவுரை யாளர்கள், "ஆவியானவரின் விசேஷித்த வரம்" என்று அழைத்த விஷயத்தை அப்போஸ்தலர்கள் பெற்றுக்கொண்டனர், இது அற்புதங்களை நிகழ்த்தும் திறனை உள்ளடக்கியிருந்தது (நடபடிகள் 2:4; 3:1-8; 5:12ஐக் காணவும்). பின்பு பேதுரு தமது பிரசங்கத்தின் முடிவை நெருங்கியபோது, அவர் தமது உரையைக் கேட்டவர்களுக்கு, விளக்கவுரையாளர்கள் "ஆவியானவரின் சாதாரணகொடை" என்று வழக்கமாக அழைக்கும் விஷயத்தை முன்வழங்கினார். விசுவாசித் திருந்தவர்களிடம் "மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" என்று அந்த அப்போஸ்தலர் கூறினார் (நடபடிகள் 2:38).

"பரிசுத்த ஆவியின் வரம்" என்ற சொற்றொடர் பல்வகை அர்த்தம் கொண்டதாக இருக்க முடியும்; ஆனால் பெரும்பான்மையானவர்கள், நடபடிகள் 2:38ல் இது பரிசுத்த ஆவியானவரை[2] ஒரு வரம் என்று குறிப்பிடுகிறது என்பதை ஒப்புக்கொள்கின்றனர். நடபடிகள் 5:32ல் பேதுரு, "தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்த ஆவியும்'' என்று குறிப்பிட்டார். 1 தெசலோனிக்கேயர் 4:8ல் பவுல், "தமது பரிசுத்த ஆவியை நமக்குத் தந்தருளின தேவன்" என்று கூறினார்.

நடபடிகள் 2:38ல் ஆவியானவரைப் பற்றிய இரண்டு சத்தியங்களைக் கவனியுங்கள். முதலாவது, தண்ணீர் ஞானஸ்நானத்தின்போது மக்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் அருளப்படுகிறார். இரண்டாவது, வசனரீதியாக ஞானஸ்நானம் பெறுகிற *ஒவ்வொருவருக்கும்* ஆவியானவரின் வரம் வாக்களிக்கப்பட்டுள்ளது. வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், கிறிஸ்தவராக இருக்கிற ஒவ்வொருவரும் "பரிசுத்த ஆவியின் வரத்தை" பெற்றுள்ளனர். இது நம்மை, இவ்வரத்தைப் பெறுபவர்கள் அற்புதம் செய்யக்கூடியவர்களாக இருக்க வேண்டும் என்பதை இது நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை என்று அறியச் செய்கிறது. நான் அறிந்த வரையில், புதிய ஏற்பாடு எழுதப்பட்டுக் கொண்டிருந்த காலகட்டத்தில் *ஒவ்வொரு* கிறிஸ்தவரும் அற்புதங்கள் நிகழ்த்தினர் என்று எவரொருவரும் உரிமைகோருவதில்லை - ஆனால் *ஒவ்வொரு* கிறிஸ்தவரும் நடபடிகள் 2:38ல் குறிப்பிட்டுள்ள "பரிசுத்த ஆவியின் வரத்தை" கொண்டிருந்தனர்.

இந்தப் பாடத்தில், முதல் நூற்றாண்டின் அற்புதங்களைப் பற்றிக் கலந்துரையாடல் என்பது நமது நோக்கமாக இருப்பதில்லை. அற்புதமான "ஆவியானவரின் அசாதாரண வரம்" என்பது தொடக்ககால சபைக்கு மாத்திரமே உரியதாக இருந்தது, அதே வேளையில் "சாதாரண வரம்" என்பது கர்த்தர் மறுபடி வருகிற வரைக்கும் எல்லாக் காலத்திற்கும் உரியதாகும் என்று கூறுதல் போதுமானதாக இருக்கும்.

ஒருவர், "பரிசுத்த ஆவியின் வரத்தை" தாம் பெற்றிருக்கிறார் என்று எவ்வாறு *அறிகிறார்?* அது "கூறப்பட்டதைக் காட்டிலும் சிறப்பாக உணருதல்" என்ற உணர்வின் காரணத்தால் அல்ல, ஆனால் ஒருவர் வசன ரீதியாக ஞானஸ்நானம் பெறுகிறபோது அவருக்குத் தேவன் ஆவியை அருளுகிறார் என்று *வேதாகமம் கூறுவதினாலேயே* ஆகும். கிறிஸ்தவர், தாம் "[தமது] பாவங்களுக்கு மன்னிப்பை" பெற்றிருத்தலை அறிகிற அதே வகையிலேயே தாம் "பரிசுத்த ஆவியின் வரத்தை" பெற்றிருப்பதையும் அறிகிறார்: ஏனென்றால் நடபடிகள் 2:38ல் தேவன் வாக்குத்தத்தம் செய்த விஷயம் அதுவாகத்தான் உள்ளது - மற்றும் தேவன் எப்போதுமே தமது வாக்குத்தத்தங்களைக் காத்துக்கொள்கிறார் (ரோமர் 4:21; 1 கொரிந்தியர் 1:9; தீத்து 1:2 ஆகியவற்றைக் காணவும்). நடபடிகள் 2:38ல் உள்ள கர்த்தருடைய வாக்குத்தத்தங்களை அறிந்து அவற்றை விசுவாசித்தல் என்பது நம்மை *நன்றாக உணரவைக்க* வேண்டும், ஆனால் உணர்வு என்பது விளைவாக உள்ளதேயொழிய, அது ஆதாரமாக இருப்பதில்லை. பரிசுத்த ஆவியானவரை நாம் ஒரு வரமாகப் பெற்றிருக்கிறோம் என்பதற்கு வேதவசனங்களின் சாட்சியானது வழக்கிட இயலாத ஆதாரமாக உள்ளது.

சிலர் பரிசுத்த ஆவியானவரைப் பற்றி விநோதமான கருத்துக்களைக் கொண்டுள்ளனர். தேவன் அவர்களின் வாழ்வில் கிரியை செய்கிறார் என்றும் சார்பளவில் அமைதியாக இருக்கிறார் என்றும் அவர்களுக்குக் கூறப்பட முடியும். இருப்பினும், அவர்கள் "பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டு" இருப்பதாக அவர்கள் நினைக்கிறபோது, அவர்கள் ஒழுங்கற்ற வகையில் நடந்துகொள்கின்றனர். முன்பு நான், பிதா, குமாரன், மற்றும் பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் ஒன்றாயிருக்கின்றனர் என்று சுட்டிக் காண்பித்தேன்; ஒருவர் என்ன செய்கிறதாகக் கூறப்படுகிறதோ அதை மூவருமே செய்கின்றனர்

என்று கூற முடியும். ஆகையால், நடபடிகள் 2:38ஐ நான் கலந்துரையாடும்போது, "நீங்கள் ஞானஸ்நானம் பெற்றபோது, உங்களுக்கு உதவுவதற்காகத் தேவன் *தமது சொந்த ஆவியைக்* கொடுத்தார்" என்று அடிக்கடி கூறுவதுண்டு. "பரிசுத்த ஆவியின் வரம்" என்ற சொற்றொடரை, ஒளிவுமறைவான மிகைத்தொனி உடையதாகக் கண்ணோக்காதீர்கள். மாறாக, அந்தக்கொடையானது, தேவன் *உங்களுடன் விசேஷித்த மற்றும் தனிப்பட்ட*, அதாவது நீங்கள் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பு கொண்டிராத *ஒரு உறவுமுறையைத்* தொடங்கும் வகையில் உங்களுக்கு அருளினார் என்று நினைத்துக்கொள்ளுங்கள்.

## ஒரு முத்திரையும் ஒரு அச்சாரமும்

தேவன் நமக்கு இந்த விசேஷித்த வரத்தை ஏன் கொடுத்தார்? ஆவியானவரின் வரமானது நமது இரட்சிப்புக்கு "ஒரு முத்திரை"யாக மற்றும் நமது நித்திய சுதந்தரத்திற்கு "ஒரு பிணையமா"க பயன்படுதல் ஒரு நோக்கமாக உள்ளது. எடுத்துக்காட்டாகப் பவுல், 2 கொரிந்தியர் 1:21, 22ல், "உங்களோடேகூட எங்களையும் கிறிஸ்துவுக்குள் ஸ்திரப்படுத்தி நம்மை அபிஷேகம்பண்ணினவர் தேவனே. அவர் நம்மை *முத்தரித்து*, நம்முடைய இருதயங்களில் ஆவியென்னும் *அச்சாரத்தையும்* கொடுத்திருக்கிறார்" என்று கூறினார். எபேசியர் 1:13, 14ல் நாம், "... விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் *முத்திரை* போடப்பட்டீர்கள். அவருக்குச் சொந்தமானவர்கள் ... மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார்" என்று வாசிக்கிறோம்.

வேதாகமம் எழுதப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில், ஒரு முத்திரை என்பது பல்வேறு நோக்கங்களுக்குப் பயன்பட்டது: அது உரிமைத்துவத்தைச் சுட்டிக்காண்பித்தது, அதிகாரத்துவத்தை உத்தரவாதப்படுத்தியது மற்றும் பாதுகாப்பை அளித்தது. ஆவியானவரின் "முத்திரையை" கொண்டிருத்தல் என்பது இந்த எல்லா நோக்கங்களையும் உரைப்பதாக உள்ளது: அது நாம் கர்த்தருக்கு உரியவர்கள் என்று அடையாளப்படுத்துகிறது (1 கொரிந்தியர் 6:19ஆ, 20அ வசனங்களைக் காணவும்), அது நாம் கிறிஸ்தவர்களாயிருக்கிறோம்[3] என்று அறிவிக்கிறது, மற்றும் அது நமக்குத் தேவனுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்துகிறது (ரோமர் 8:26-28, 37ஐக் காணவும்). ரோமர் 8:9ல், பவுல் தெய்வீக உரிமைத்துவம் என்பதன் அம்சத்தை முக்கியத்துவப்படுத்தினார். அவர், "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல" என்று கூறினார். கலாத்தியர் 4:6ல், அவர் அதிகாரத்துவத்தின் விஷயத்தை வலியுறுத்தினார். அந்த வசனத்தில் பவுல், "மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், 'அப்பா! பிதாவே!' என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார்" என்று கூறினார். (தேவன் நம்மை தமது புத்திரர்கள் *ஆக்குவதற்காக* அல்ல, ஆனால் நாம் அவரது புத்திரர்களாக *இருப்பதினாலேயே* அவர் நமது இருதயங்களினுள் ஆவியை அனுப்பினார் என்பதைக் கவனியுங்கள்.)

பரிசுத்த ஆவியானவரின் வரம் "ஒரு அச்சாரம்" என்ற வகையிலும் பேசப்படுகிறது. ஏற்கனவே குறிப்பிடப்பட்ட வசனப்பகுதிகளுடன் கூடுதலாக, 2 கொரிந்தியர் 5:5, "ஆவியென்னும் அச்சாரத்தை நமக்குத் தந்தவரும் அவரே [தேவனே]" என்று கூறுகிறது. "அச்சாரம்" என்பது, விலைக்கு வாங்குபவரால் "உறுதிப்

படுத்தும் நோக்கில் வைப்புத்தொகையாக" தரப்பட்டதும், விலைக்கு வாங்குதல் நிறைவுபெறவில்லையென்றால் இழந்துபோகப்படுவதுமான பணத்தைக் குறிப்பிடும் *arrabon* என்ற வார்த்தையிலிருந்து வருகிறது.[4] எனவே NASB வேதாகமப் பிரதியில் "pledge" ("அச்சாரம்") என்பதற்குப் பின்வரும் குறிப்பு உள்ளது: *"அல்லது முன்பணம்."* "முன்பணம்" மற்றும் "உத்தரவாதம்" என்பவை *arrabon* என்ற வார்த்தையின் கருத்தை விளக்கும் மற்ற சொற்றொடர்களாகும்.[5]

ஆவியின் அச்சாரம் *எதன்மீது* "ஒரு முன்பணமாக" உள்ளது? அது எதை "உத்தரவாதப்படுத்துகிறது"? எபேசியர் 1:13, 14, "வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்த ஆவி, ... அவருக்கு [தேவனுக்கு] சொந்தமானவர்கள் மீட்கப்படுவார்கள் என்பதற்கு ... நம்முடைய *சுதந்தரத்தின்* அச்சாரமாயிருக்கிறார்" என்பதைப் பற்றிப் பேசுகிறது. பிற்பாடு எபேசியர் 4:30ல் பவுல், "மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவி" பற்றிப் பேசுகையில் இதே கருத்தை ஏற்படுத்த "முத்திரை" என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். பரிசுத்த ஆவியானவரின் வரம் என்பது, நமது நித்திய வெகுமதிக்கு பரலோகத்தில் ஒரு பரிசுத்த "முன்தொகை"யாக, ஒரு தெய்வீக "உத்தரவாதமாக" உள்ளது!

*Arrabon* என்ற வார்த்தையின் இன்னொரு அம்சம் கவனிக்கத் தக்கதாக உள்ளது. வேதாகமம் எழுதப்பட்டுக்கொண்டிருந்த காலங்களில், இரு மனிதர்கள் ஒரு நிலத்தைக் கிரயம் பண்ணுவதில் ஒப்புக்கொள்ளும்போது, அதை விற்பவர் சிலவேளைகளில், அந்த நிலத்திலிருந்து ஒருபிடி மண்ணை எடுத்து நல் நம்பிக்கையின் *arrabon* அடையாளமாக, அந்த நிலத்தை வாங்குபவரிடம் அதைக் கொடுப்பதுண்டு. ஒரு வீடு விற்கப்படும்போது, அதை விற்பவர், ஒப்பந்தத்தை முத்திரையிடும் விதமாக அந்த வீட்டுக்கூரையிலிருந்து ஒரு கைப்பிடி அளவு கூரையை இழுத்து எடுப்பதுண்டு. சில எழுத்தாளர்கள், பரிசுத்த ஆவியின் வரத்தை நாம் பரலோகத்தின் "உத்தரவாதமாக" கருதுவது மாத்திரமல்ல, ஆனால் இந்த வரம் தன்னில்தானே, பரலோகத்தின் "ஒரு துண்டுப்பகுதி"யாக, வரவிருக்கும் ஆசீர்வாதங்களின் முன்சுவையாக உள்ளது என்ற வகையிலும் அதைப்பற்றி நினைக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவித்துள்ளனர்!

## ஆவியானவர் உள்ளாக வாசம்பண்ணுதல்

2 கொரிந்தியர் 1ம் அதிகாரத்தில், பவுல் பரிசுத்த ஆவியானவரின் வரத்தைக் குறிப்பிட்டபோது, தேவன் "நம்முடைய இருதயங்களில் ஆவியென்னும் அச்சாரத்தையும் கொடுத்திருக்கிறார்" என்று அவர் கூறினார் (வசனம் 22). ரோமர் 5ல் அவர், "நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவஅன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது" என்று கூறினார் (வசனம் 5). "நம்முடைய இருதயங்களில்" பரிசுத்த ஆவி என்னும் கருத்தை விளக்கு வதற்குப் பவுல், நமக்குள் பரிசுத்த ஆவி *வாசம்பண்ணுவதாகக்* கூறினார். முன்பே குறிப்பிட்டபடி, அவ்வகையான சொற்றொடராக்கம் ரோமர் 8:9, 11ல் மூன்று முறைகள் பயன்படுத்தப்பட்டது. மேலும் பவுல் பிற நிருபங்களிலும் அந்த விளக்கத்தைப் பயன்படுத்தினார். எடுத்துக்காட்டாக, 1 கொரிந்தியர் 3:16ல் அவர், "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?" என்று கேட்டார் (1 கொரிந்தியர் 6:19; எபேசியர் 2:22ஐக் காணவும்). மீண்டுமாக, அவர் தீமோத் தேயுவுக்கு எழுதிய இரண்டாவது நிருபத்தில், "நமக்குள்ளே வாசம்பண்ணுகிற

பரிசுத்த ஆவி" பற்றிப் பேசினார் (2 தீமோத்தேயு 1:14). "வாசம்பண்ணுதல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*oikeo* என்பதிலிருந்து வந்த) கிரேக்க வார்த்தை "ஒருவரின் குடியிருப்பில் குடியமர்தல்" என்று அர்த்தப்படுகிறது. இது "குடியிருப்பவர்" இப்போது "குடியிருப்பை" கட்டுப்படுத்துவதைச் சுட்டிக் காண்பிக்கிறது.

ஆவியானவர் நமக்குள் வாசம்பண்ணுகிறார் என்ற உண்மையை நாம் ஒப்புக்கொண்டால், இது நமது வாழ்வில் ஒரு வேறுபாட்டை ஏற்படுத்த வேண்டும் (1 கொரிந்தியர் 3:16, 17; 6:19, 20ஐக் காணவும்). தேவன் அல்லது கிறிஸ்து உங்கள் வீட்டிற்கு வந்து உங்களுடன் வசிக்க இருப்பதாக நீங்கள் ஒரு வார்த்தையைப் பெற்றால், நீங்கள் என்ன செய்வீர்கள்? நீங்கள் அனேகமாக, உங்கள் இல்லத்திற்கு விரைந்து சென்று, வீட்டைச் சுத்தப்படுத்தத் தொடங்கு வீர்கள் - மற்றும் நீங்கள் அதை அரைமனதுடன் செய்யமாட்டீர்கள். சிலருக்கு "வீட்டைச் சுத்தம் செய்தல்" என்பதன் கருத்தானது காணக்கூடாத எதையும் ஒரு மூடிய பெட்டிக்குள் அல்லது ஒரு படுக்கையின்கீழ் மறைத்து வைத்துவிடுதல் என்பதாக உள்ளது. இருப்பினும், *தேவன்* அவர்களுடன் வசிக்க வருவதாக இருந்தால், அவர்கள் *ஒவ்வொரு* இடத்தையும் சுத்தப்படுத்துவார்கள். நாம் *பரிசுத்த ஆவி* வாசம் பண்ணும் இடமாக இருக்கிறோம். அவர் பரிசுத்தராக *இருப்பதால் பரிசுத்த* ஆவி என்று அழைக்கப்படுகிறார். அவர் நமக்குள் வாசம்பண்ணுவதற்கு, நாம் பரிசுத்தமான வாழ்வை வாழ்வது அவசியமாக உள்ளது! இந்த சத்தியத்தை நிலைநாட்டுதல் என்பது, ரோமர் 8ன் வார்த்தைகளை எழுதுவதில் பவுல் கொண்டிருந்த நோக்கங்களில் ஒன்றாக இருந்தது: பரிசுத்த ஆவியானவர் உங்களில் வாசம்பண்ணுவதால் நீங்கள் அதற்கு ஏற்றபடி *செயல்பட வேண்டும்* (ரோமர் 8:13ஆ வைக்காணவும்)!

பரிசுத்த ஆவியானவர் *எவ்வாறு* அல்லது எந்தக் கருத்தில் நமக்குள் வாசம்பண்ணுகிறார் என்ற கேள்வி பலரின் அக்கறைக்குரியதாக உள்ளது. அந்த உள்ளான வாசம்பண்ணுதல் "எவ்வாறு" என்று விளக்கியுரைக்கப் பவுல் முயற்சி எதையும் மேற்கொள்ளவில்லை. அவர் ஆவியானவர் நமக்குள் வாசம் பண்ணுகிறார் என்றும் இது நமது வாழ்வில் குறைந்தபட்சம் இருவழிகளில் செயல்விளைவை ஏற்படுத்த வேண்டும் என்றும் மாத்திரமே அவர் கூறினார்: அது நம்மைத் தைரியத்தினால் நிரப்ப வேண்டும், மற்றும் அது நம்மைத் தேவ னுக்காக வாழும்படி தீர்மானம் செய்ய வைக்க வேண்டும்.

தேவத்துவத்தின் ஒரு நபர் செய்கிற அதே கிரியையை மற்ற நபர்களும் செய்வதாகக் கூறப்படுவதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். ஆகவே, பிதாவும் குமாரனும்கூட நமக்குள் வாசம்பண்ணுவதாக வாசிக்கையில் நாம் திகைப்படையக் கூடாது. 1 யோவான் 4:15ல் நாம், "இயேசுவானவர் தேவனு டைய குமாரனென்று அறிக்கைபண்ணுகிறவன் எவனோ அவனில் தேவன் நிலைத்திருக்கிறார், அவனும் தேவனில் நிலைத்திருக்கிறான்" என்று வாசிக் கிறோம். கலாத்தியர் 2:20ல் பவுல், "இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" என்று கூறினார்.

தேவன் அல்லது கிறிஸ்து நமக்குள் வாசம்பண்ணுவதாகப் பேசும் வசனப் பகுதிகளில், பிதா அல்லது குமாரன் வாசம்பண்ணுதல்/நிலைத்திருத்தல் என்பது எவ்வளவு அடிக்கடி ஆவியானவருடன் தொடர்புபடுத்தப்படுகிறது என்று கவனித்தல் தகுதியானதாக இருக்கிறது. எடுத்துக்காட்டாக, யோவான்

*14:23 - ஆவியானவரை அனுப்புவதற்கு இயேசுவின் வாக்குத்தத்தத்தின் சந்தர்ப்பப்பொருளில் (வசனங்கள் 16, 17, 26) - கிறிஸ்துவின் வசனத்தைக் கைக்கொள்ளுபவரிடத்தில் தேவனும் கிறிஸ்துவும் வந்து வாசம்பண்ணுவார்கள் என்று கூறுகிறது. எபேசியர் 3ல், பவுல் தமது வாசகர்களுக்குத் தேவன், "அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும், விசுவாசத்தினாலே கிறிஸ்து [அவர்கள்] இருதயங்களில் வாசமாயிருக்கவும்" வாய்க்கப்பண்ண வேண்டும் என்று ஜெபித்தார் (வசனங்கள் 16, 17). யோவான், "அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவன் அவரில் நிலைத்திருக் கிறான், அவரும் அவனில் நிலைத்திருக்கிறார்; அவர் நம்மில் நிலைத்திருக் கிறதை அவர் நமக்குத் தந்தருளின ஆவியினாலே அறிந்திருக்கிறோம்" என்று எழுதினார் (1 யோவான் 3:24). அதே நிருபத்தில் சற்றே பின்பு அவர், "தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார்; அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும். அவர் தம்முடைய ஆவியில் நமக்குத் தந்தருளினதினாலே நாம் அவரிலும் அவர் நம்மிலும் நிலைத்திருக்கிறதை அறிந்திருக்கிறோம்" என்று கூறினார் (4:12, 13).*

*ஒருவேளை, இவற்றைப் போன்ற வசனப்பகுதிகள், தேவனும் கிறிஸ்துவும் நமக்குள் பிரதிநிதித்துவ வகையிலும், பரிசுத்த ஆவியானவர் நமக்குள் தனிப் பட்ட வகையிலும் வாசம் பண்ணுகின்றனர் என்று சிலர் முடிவு செய்யத் தூண்டி யிருக்கலாம்.[6] கடந்தகாலத்தில், கிறிஸ்தவ எழுத்தாளர்கள் பழைய ஏற்பாட்டுக் காலங்களை "பிதாவினுடைய யுகம்" என்றும், பூமியில் கிறிஸ்து தங்கியிருந்த காலத்தை "குமாரனுடைய யுகம்" என்றும், கிறிஸ்தவ யுகத்தை "பரிசுத்த ஆவியி னுடைய யுகம்" என்றும் குறிப்பிடுவது வழக்கமாயிருந்தது.[7]*

## உள்ளாக வாசம்பண்ணும் ஆவியானவர் கிறிஸ்தவர்களுக்கு உதவும் வழிகள்

*ரோமர் 8, கிறிஸ்தவர்களுக்கு உள்ளாக வாசம்பண்ணும் ஆவியானவர் என்ன செய்கிறார் என்பதற்கு முதன்மை வசனப்பகுதியாக உள்ளது. நாம் ஏற்கனவே ஆவியானவரின் "மேல்நோக்கிய இழுத்தல்" (வசனம் 2ஐக் காணவும்); நமது சரீர உயிர்த்தெழுதலில் ஆவியானவரின் பணிப்பொறுப்பு (வசனம் 11); மற்றும் சரீரத்தின் சாவுக்கேதுவான கிரியைகளை நாம் ஆவியானவரைக் கொண்டு அழித்தல் (வசனம் 13) ஆகியவற்றைப் பற்றிக் கலந்துரையாடினோம். வரவிருக்கும் பாடங்களில், நாம் ஆவியானவரால் வழிநடத்தப்பட்டிருத்தல் (வசனம் 14), நமது ஆவிகளுடன் ஆவியானவர் சாட்சியிடுதல் (வசனம் 16), மற்றும் நமது பலவீனங்களில் ஆவியானவர் நமக்கு உதவுதல் (வசனம் 26) ஆகியவற்றைப் பற்றிக் கற்போம். மீண்டும் ஒருமுறை, இவ்விஷயங்களை ஆவியானவர்* எவ்வாறு *செய்கிறார் என்பது பற்றி நேரெதிர்க்கருத்து உள்ளது - மற்றும், மீண்டும் ஒருமுறை, "எவ்வாறு" என்பதை விளக்கப் பவுல் முயற்சி எதையும் ஏற்படுத்தவில்லை. அவர் ஆவியானவர் என்ன செய்கிறார் என்பதை மாத்திரம் எடுத்துரைத்து, அதை செயல்விளைவில் விசுவாசத்தினால் ஏற்றுக் கொள்ளும்படி நம்மைக் கேட்டுக்கொண்டார்.*

*பரிசுத்த ஆவியானவர், தாம் ஏவுதல் செய்த வசனத்தின் மூலமாக நமக்கு உதவுகிறார் என்பது ஒரு வழியாக உள்ளது என்பதை எல்லாரும் ஒப்புக் கொள்கின்றனர். எபேசியர் 6:17ல், வசனம் "ஆவியின் பட்டயம்" என்று*

அழைக்கப்படுகிறது. ஆவியானவரின் ஊழியத்தினுடைய இந்த அம்சத்தைக் குறைத்துப்போட நாம் துணிய மாட்டோம். வசனம் நமக்குள் விசுவாசத்தை உண்டாக்குகிறது (ரோமர் 10:17), நம்மைச் சுத்திகரிக்கிறது (யோவான் 15:3; நடபடிகள் 15:9ஐக் காணவும்), நம்மைப் பரிசுத்தப்படுத்துகிறது (யோவான் 17:17, 19), நமக்குள் கிரியை செய்கிறது (1 தெசலோனிக்கேயர் 2:13), மற்றும் நம்மை இரட்சிக்கிறது (யாக்கோபு 1:21; 1 பேதுரு 1:22, 23ஐக் காணவும்). நமது வாழ்வில் நாம் "ஆவியின் கனிகளை" தரவேண்டும் என்று பவுல் நமக்கு அறைகூவல் விடுத்தார் (கலாத்தியர் 5:22, 23) - ஆனால் விதையில்லாமல் கனி யில்லை, மற்றும் "விதை தேவனுடைய வசனம்" என்றுள்ளது (லூக்கா 8:11).

சிலர் ஆவியானவருடைய ஊழியத்தை வசனத்துடன் மட்டுப்படுத்து வார்கள், ஆனால் அந்த மட்டுப்படுத்துதல் என்பது மிகைப்பட்டதாகக் காணப்படுகிறது. முன்னதாக, நாம் ஆவியானவரின் வரமானது கிறிஸ்தவ யுகத்திற்கே உரியது மற்றும் இது கிறிஸ்தவரல்லாதவர்கள் கொண்டிராததாக உள்ளது என்று குறிப்பிட்டிருந்தோம். இருப்பினும், பழைய ஏற்பாட்டில் இருந்தவர்கள் தீர்க்கதரிசிகள் மூலமாகத் தேவனுடைய வசனத்தைப் பெற் றிருந்தனர், கிறிஸ்தவரல்லாதவர்கள்கூட வசனத்தின் சொந்தப்பிரதியை கொண்டிருக்க முடியும். ஒருவேளை, நாம் *தேவனுடைய* ஆவியைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம் என்று நினைவுப்படுத்திக்கொண்டால் அது நமக்கு உதவியாயிருக்கும். தேவன் தமது வசனத்தை நமக்குக் கொடுத்துவிட்டுப் பின்பு நம்மைக் கைவிட்டுவிட்டாரா? அவர் தமது மக்களின் வாழ்வில் தொடர்ந்து கிரியை நடப்பிப்பதில்லையா? ஜெபத்தில் நோக்கம் மற்றம் வல்லமை இருப்ப தில்லையா (யாக்கோபு 5:16)?

ரோமர் 8:28, தேவன் நமது வாழ்வில் அருளிரக்கத்துடன் கிரியை செய்கிறார் என்று அறிவிக்கிறது.[8] தேவத்துவத்தின் ஒரு உறுப்பினர் என்ன செய்கிறாரோ அதை எஞ்சியுள்ளவர்களும் செய்கின்றனர் என்று கூறப்படுவதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். ரோமர் 8:28ன் சந்தர்ப்பப்பொருளானது, கிறிஸ்தவரின் வாழ்வில் ஆவியானவரின் கிரியையாக உள்ளது (வசனங்கள் 27, 28ஐக் காணவும்). இவ்வாறாக, நாம் ஆவியானவர் நமது வாழ்வில் அருளிரக்கத்துடன் கிரியைசெய்கிறார், "சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிற[தற்கு]" நிகழ்வுகளைக் கட்டளையிடுகிறார் என்று முடிவுசெய்கிறோம்.

பரிசுத்த ஆவியானவர் தமது உள்ளாக வாசம்பண்ணும் வல்லமையில் நமக்கு வேறு ஏதேனும் செய்கிறாரா? ரோமருக்கு எழுதிய நிருபத்தில் பிற்பாடு, நாம் பின்வரும் ஆசீர்வதித்தலைக் காண்கிறோம்: "பரிசுத்த ஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு, நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவதாக" (15:13). முன்னதாக, நான் எபேசியருக்காகப் பவுலின் ஜெபத்தி லிருந்து மேற்கோள் காண்பித்தேன்: "நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும், ... அவர்[தேவன்] ... உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்" (எபேசியர் 3:16, 19). அந்த ஜெபத்தைத் தொடர்ந்து ஒரு ஆசீர்வதித்தல் உள்ளது: "நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் *நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே,* நமக்குச் செய்ய வல்லவ ராகிய அவருக்கு, சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை

*தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்'' (எபேசியர் 3:20, 21). மீண்டும் ஒருமுறை, பவுல் உண்மைகளை எடுத்துரைத்து, "எவ்வாறு" என்பதை விளக்கப்படுத்த முயற்சி செய்யாதிருந்தார்.*

## தேவனுடைய அளிப்பை ஏற்புடையதாக்கிக் கொள்ளுதல்

நாம் முழுமையாகப் புரிந்துகொண்டாலும் இல்லாவிட்டாலும், தேவன் தமது ஆவியின் மூலமாகக் கிறிஸ்தவர்களுக்கு ஆச்சரியமான ஆதாரவளங்கள் கிடைக்கச் செய்துள்ளார் என்று புதிய ஏற்பாடு போதிக்கிறது. துரதிர்ஷ்டவசமாக, இந்த ஆதாரவளங்கள் கிடைக்கப் பெறுகின்றன என்ற உண்மையானது, இவை பயன்படுத்தப்படும் என்று அர்த்தப்படுவதில்லை. சமுத்திரத்தில் விழுந்த ஒரு மனிதரைப் பற்றி நான் வாசித்தேன். உயிர்காக்கும் கயிறு ஒன்று அவரை நோக்கி வீசப்பட்டது, ஆனால் அதை அவர் பிடித்துக்கொள்ள மறுத்தார் - எனவே அவர் மூழ்கிப்போனார். தனது கடனைத் திருப்பிச்செலுத்தத் தவறித் தனது வீட்டை இழந்துபோன இன்னொரு மனிதரைப் பற்றியும் நான் வாசித்தேன். அவர் தமது எஞ்சிய நாட்களில் வீடற்றவராகத் தெருக்களில் ஜீவித்து அலைந்து திரிபவராக வாழ்ந்தார். அவரது மரணத்திற்குப் பின்பு, அவர் ஒரு வங்கிக்கணக்கில், 50 லட்சம் ரூபாய் வைத்திருந்தார் என்று கண்டறியப்பட்டது. அவர் தமக்குத் தேவையான ஆதாரவளங்களைக் கொண்டிருந்தார் - ஆனால், ஏதோ காரணத்தினால் அவர் அவற்றைப் பயன்படுத்தாதிருக்க முடிவுசெய்திருந்தார். நாம் கிறிஸ்தவ வாழ்வை வாழ்வதற்குத் தேவையான ஆதாரவளங்களைத் தேவன் நமக்கு அளித்திருக் கிறார், ஆனால் அவற்றிலிருந்து அனுகூலத்தைப் பெற்றுக்கொள்ளுதல் என்பது நம்மைப் பொறுத்ததாக உள்ளது.

தேவனுடைய அளிப்பை நாம் *எவ்வாறு* ஏற்புடையதாக்கிக் கொள்கிறோம்? வரவிருக்கும் பாடங்களில், ஆவியானவர் நமக்கு உதவுகிற குறிப்பிட்ட வழிகளைப் பற்றிப் படிக்கத் தொடருகையில், நாம் இதைப்பற்றிக் கலந்துரை யாடுவோம் (ரோமர் 8:14, 16, 26), ஆனால் ஒரு சில குறிப்புரைகள் இங்கு முறையானவைகளாக உள்ளன. நாம் ஞானஸ்நானம் பெறும்போது, பரிசுத்த ஆவியானவர் நம்முடன் வந்து வாசம்பண்ணுகிறார் (நமக்குள் வாசம்பண்ணுகிறார்) நடபடிகள் 2:38; ரோமர் 8:11ஐக் காணவும்). நம்மில் ஒவ்வொருவரும், ஆவியானவரை வரவேற்கத்தக்க விருந்தினராக நடத்துவதா, அல்லது அவரை விரும்பத்தகாத பார்வையாளராகப் புறக்கணிப்பதா என்பதை நாமே முடிவுசெய்கிறோம்.

1 தெசலோனிக்கேயர் 5:19ல் பவுல், "ஆவியை அவித்துப்போடாதிருங்கள்" என்று எழுதினார்.[9] நெருப்பை அணைக்கத் தண்ணீரை ஊற்றுதல் என்பது ஒப்புவமையாக உள்ளது. பேச்சின் உருவகமானது முதல் நூற்றாண்டு வாசகர்களுக்கு வல்லமைநிறைந்த வகையில் பேசியிருக்கும். குளிர்காய்வதற்கும் சமையலுக்குப் பயன்படுத்துவதற்கும் நெருப்பு அவசியமாக இருந்தது. ஒளியூட்டுவதற்கு அது [நெருப்பு] ஒன்றுதான் ஆதாரமூலமாக இருந்தது. நெருப்பு அணைக்கப்பட்டால், அவர்கள் குளிரில் விடப்பட்டு, பசித்திருந்து மற்றும் இருளில் இருப்பார்கள். ஆவியானவர் பல வழிகளில் அவித்துப்போடப்பட முடியும். தெளிவான சிலவற்றைக் குறிப்பிட என்னை அனுமதியுங்கள்:

- *அறியாமையின் மூலமாக* - அதாவது, தேவனுடைய வசனத்தை அறியாதிருத்தலின் மூலமாக. பரிசுத்த ஆவியானவர் ஏவுயுள்ள [வேதாகமம் என்ற] புத்தகத்தை வாசித்து படித்தலே, நாம் என்ன செய்ய வேண்டுமென்று பரிசுத்த ஆவியானவர் விரும்புகிறார் என்பதை அறியக்கூடிய ஒரே *மெய்யான* வழியாக உள்ளது.
- *அவிசுவாசத்தின் மூலமாக.* சிலர், வேதாகமம் கூறுவது என்ன என்பதை அறிந்திருக்கின்றனர், ஆனால் அது உண்மையிலேயே தேவனுடைய ஆவியினால் ஏவப்பட்டுள்ளது என்பதை அவர்கள் நம்பி இணங்குவதில்லை.
- *உதாசீனத்தின் மூலமாக.* சிலர் வேதாகம போதனையை அறிந்துள்ளனர், ஆனால் வசனத்தின் கட்டளைகளைப் பின்பற்றுதலில் அவர்கள் ஆர்வம்கொண்டிருப்பதில்லை.
- *கீழ்ப்படியாமையின் மூலமாக.* சிலர் வசனத்தில் ஆவியானவரின் அறிவுறுத்துதல்களுக்குச் சிறிதளவே கவனம் செலுத்துகின்றனர் அல்லது கவனம் செலுத்துவே இல்லை; அவர் தங்கள் சுயவழியில் செல்வதையே விடாப்பிடியாகக் கொண்டுள்ளனர். ரோமர் 8ன் மொழிநடையில், அவர்கள் ஆவிக்கேற்றபடியின்றி மாம்சத்துக் கேற்றபடி நடக்கின்றனர்.

நாம் ஆவியை "அவித்துப்போட" முடியும் என்பதோடுகூட, நாம் அவரை "துக்கப்படுத்தவும்" கூடும். எபேசியருக்குப் பவுல், "... நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்" என்று கூறினார் (எபேசியர் 4:30). நீங்கள் நேசிக்கிற ஒருவரால், நீங்கள் உதவிசெய்ய விரும்பி ஆனால் உங்கள் உதவியையும் ஆலோசனையையும் மறுத்த ஒருவரால், நீங்கள் எப்போதாவது துக்கப்பட்டிருக்கிறீர்களா? ஆம் என்றால், தேவனுடைய பிள்ளைகள் வசனத்தை புறக்கணித்து அவரது உதவியை மறுக்கிறபோது ஆவியானவர் எவ்வகையான உணர்வு கொண்டிருப்பாரென்பதை உங்களால் புரிந்துகொள்ள முடியும். கடந்தகாலத்தில் குறிப்பிடத்தக்க ஒரு பிரசங்கியார், நாம் தேவனுடைய ஆவியை பலவழிகளில் எவ்வாறெல்லாம் துக்கப்படுத்தினோம் என்பதை நியாயத்தீர்ப்பு நாளில் நாம் அறிகையில், அனேகமாக நாம் திகைப்படைவோம் என்று ஒரு முறை கூறினார்.

ஆவியானவரை அணைத்துப்போடுதல் மற்றும் துக்கப்படுத்துதல் என்பவற்றுடன் கூடுதலாக, நாம் அவரை "நிந்திக்கவும்" கூடும். எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், "மனப்பூர்வமாய்ப் பாவம்செய்கிற" கிறிஸ்தவர்கள் (10:26) "கிருபையின் ஆவியை நிந்திக்கிறவர்களாய்" இருக்கின்றனர் (வசனம் 29) என்று கூறினார். நான் நிந்திக்கப்படுவதை விரும்புவதில்லை, நீங்கள் விரும்புகிறீர்களா? பரிசுத்த ஆவியானவரும் அதை விரும்புவதில்லை. இருப்பினும், நாம் எவ்விதம் வாழவேண்டுமென்று தேவன் விரும்புகிறாரோ, அதற்கு நேர்மாறாக வாழ்வதில் நாம் விடாப்பிடியாக இருக்கும்போது, நாம் மிகச்சரியாக அதையே [ஆவியானவரை நிந்திப்பதையே] செய்கிறோம்.

நாம் நேர்மறையான கருத்துக்களின் பக்கமாய்த் திரும்புவோமாக: நாம் ஆவியானவரை வரவேற்கத்தக்க விருந்தினராக நடத்துவதும்

அவரால் உதவப்படுவதும் எவ்வாறு கூடும்? எபேசியர் 5:18ல் பவுல், ''துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினாலே நிறைந்து'' என்று கூறினார். இவ்வசனத்தில் பல நேரெதிர் கருத்துக்கள் தெளிவாக உள்ளன. மதுபானத்தினால் நிறைந் திருப்பதற்குப் பதிலாக, நாம் தேவனுடைய ஆவியானவரால் நிறைந்திருக்க வேண்டும். மதுபானம் நம்மைக் கட்டுப்படுத்த அனுமதிப்பதற்குப் பதிலாக, நாம் ஆவியானவரால் கட்டுப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். மதுபானத்தைச் சார்ந் திருப்பதற்குப் பதிலாக, நாம் தேவனுடைய ஆவியானவரைச் சார்ந்திருக்க வேண்டும். ''ஆவியினாலே நிறைந்து'' என்ற வார்த்தைகளை நான் ஆழ்ந்து சிந்திக்கையில், இவ்விடத்தில் பவுல் வார்த்தைகளில் ஒரு விளையாட்டை ஏற்படுத்தினாரோ என்று வியப்படைகிறேன்.

ஆவி (*pneuma*) என்பதற்கான வார்த்தை ''காற்று'' என்பதற்கான வார்த்தை யாகவும் உள்ளது. பவுலின் வாசகர்கள் காற்றைச் சார்ந்திருக்கும் கப்பல் களில் பயணம் செல்வது பற்றி பழக்கமானவர்களாயிருந்தனர். ஒரு கப்பல் காற்றினால் முன்னோக்கிச் செலுத்தப்படுவதற்கு, அதன் பாய்கள் சரியான வகையில் *அமைக்கப்பட்டிருத்தல்* அவசியமாயிருந்தது. அவைகள் சரியான வகையில் அமைக்கப்பட்டிருக்கையில், கப்பல்கள் முன்னோக்கிச் செல்லும் வகையில் அவைகள் காற்றினால் *நிரப்பப்பட்டிருக்கும்.* ரோமர் 8ல் பவுல் நமது சிந்தைகள் ஆவிக்குரிய விஷயங்களில் *அமைவு பெற்றிருக்க வேண்டியது* அவசியமாக உள்ளது என்று வலியுறுத்தினார் (வசனங்கள் 5, 6). நமது சிந்தைகள் இவ்வாறு அமைவுபெற்றிருக்கும்போது, சரியான வகையில் அமைக்கப்பட்டுள்ள பாய்களைக் காற்று நிரப்புவதுபோலவே நமது வாழ்வையும் பரிசுத்த ஆவியானவர் நிரப்ப முடியும். நான் அறிந்தவகையில் இதை இயன்ற அளவு சுலபமாகக் கூற என்னை அனுமதியுங்கள்: எனது வாழ்வை ஆவியானவர் நிரப்பி கிறிஸ்தவன் என்ற வகையில் நான் இருக்க வேண்டிய பிரகாரம் இருப்பதற்கு அவர் உதவ வேண்டுமென்று நான் விரும்பினால், நான் தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்கான *மனநிலைப்பாடு* (மன அமைவு) கொண்டிருக்க வேண்டும்.

பரிசுத்த ஆவியானவர் உங்கள் வாழ்வை ஆசீர்வதிக்கக் கூடுமுன்னர், நீங்கள் அவரது உள்ளான வாசம்பண்ணுதல் மற்றும் அவரது கிரியைகள் பற்றிய ஒவ்வொரு விஷயத்தையும் புரிந்துகொண்டிருக்க வேண்டுமா? எவரொருவரும் ஆவியானவரை முற்றிலுமாகப் புரிந்துகொள்ள முடியும் என்று உரிமைகோர முடியாது என்பதால், மேற்கண்ட கேள்விக்கு ''இல்லை'' என்பதே பதிலாக உள்ளது என்பதற்காக நாம் நன்றிநிறைந்தவர்களாக இருக்க வேண்டும். அவரது உதவியை நாம் எவ்வாறு *ஏற்புடையதாக்கிக் கொள்ளலாம்* என்று நாம் புரிந்துகொள்ளுதலே முக்கியமானதாக உள்ளது. நான் ஒரு இளைஞனாக இருந்தபோது, சிலவேளைகளில் நான் தோட்டத்தில் விதைகளை நடுவதுண்டு. விதைகள் எவ்வாறு முளைத்து வளர்ந்தன என்பதை நான் புரிந்துகொள்ளவில்லை; ஆனால் அவற்றை நிலத்தில் நடுவது, அவற்றிற்குத் தண்ணீர் ஊற்றுவது, அவற்றிற்கு உரமிடுவது, மற்றும் தோட்டத்தைக் களைகள் இல்லாது காத்துக்கொள்வது ஆகியவற்றை நான் அறிந்திருந்தேன். எஞ்சியதை நான் தேவனிடத்தில் ஒப்புவித்துவிட்டேன் - அவர் எனக்கு விளைச்சலைக் கொடுத்தார். அதுபோலவே, ஆவியானவர் எனக்குள் எவ்வாறு வாசம்பண்ணுகிறார் என்பதையும் அவர் என்னை எவ்வாறு ஆசீர்வதிக்கிறார்

என்பதையும் நான் முழுமையாகப் புரிந்துகொள்ளவில்லை. நான் எவ்வாறு வாழ வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பதை நான் அறிந்திருக்கிறேன். அதைச்செய்ய நான் முயற்சி செய்கிறேன், எஞ்சியதை நான் தேவனிடத்தில் ஒப்புக்கொடுக்கிறேன். ஏறக்குறைய அறுபது ஆண்டுகள் காலம் கிறிஸ்தவ வாழ்வை வாழ்ந்தபின்பு, தேவன் ஒருக்காலும் என்னைக் கீழேவிட்டுவிடவில்லை என்று நான் சாட்சிகொடுக்க முடிகிறது. பிதா, குமாரன், மற்றும் பரிசுத்த ஆவியானவர் எனது வாழ்வை எண்ணியுரைக்க இயலாத ஆசீர்வாதங்களினால் நிரப்பியுள்ளனர்.

## முடிவுரை

முன்னதாக, நான் ஆவியானவர் நமக்குள் வாசம்பண்ணுவதை நாம் எவ்வாறு அறிய முடியும் என்று கேட்டேன், மற்றும் இதை வேதாகமம் போதிப்பதாலும் விசுவாசத்தினால் இதை நாம் ஏற்றுக்கொள்வதாலுமே நாம் இதை அறியமுடியும் என்று பதிலும் கூறியிருந்தேன். J. W. மெக்கார்வி என்பவர், இந்தக் கேள்வியைப் பற்றிக் கூடுதலாக ஒரு விளக்கத்தை ஏற்படுத்தினார்:

> … பரிசுத்த ஆவியானவரின் உதவி உண்மையானதும் செயல்விளைவுள்ளதுமாக இருந்தாலும், உதவி பெறுபவர் … அதை [தன் புலன் உணர்வுகளால்] கவனித்து எடுத்துக்கொள்ளும்படி அது அத்துமீறிப் பிரவேசிப்பதாக இருப்பதில்லை. மாம்சத்தின்மீதான வெற்றி என்பது எல்லாத் தோற்றத்திலும் [பௌதீக] உணர்விலும் கிறிஸ்தவருக்குச் சொந்தமானதாக உள்ளது, மற்றும் அவர், தமது பாரங்கள் … இலகுவாக்கப்படுதலை [தமது புலன்களால் உணரமுடியும்] என்பதால் அல்ல, ஆனால் [முன்பு] அவர் தோல்வியுற்றிருந்த அவரது முயற்சிகளில் இப்போது சரியானவற்றைச் செய்யமுடிகிறது என்ற உண்மையினாலேயே ஆவியானவரின் உதவியைப் புரிந்துணருகிறார்.[10]

தேவனுடைய பிள்ளையாக இருக்கிற ஒருவர்,[11] தமது வாழ்வை ஆவியானவர் நிரப்ப அனுமதித்து இருக்கிறாரா அல்லது அவர் ஆவியை அவித்துப் போட்டிருக்கிறாரா என்று காண, தமக்குத்தாமே ஒரு சோதனையைக் கொடுக்க முடியும். அவரது வாழ்வில் "ஆவியின் கனிகள்" மேம்படுத்தப்படுகின்றனவா என்று காண்பதே அந்தச் சோதனையாக உள்ளது: "ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்" (கலாத்தியர் 5:22, 23). இவை எல்லாமுமே நமது கர்த்தர் கொண்டிருந்த பண்புகளாக இருப்பதால், ஜார்ஜ் பெய்லி என்பவர் இந்தச் சிந்தனையைப் பின்வருமாறு விளக்கப்படுத்தினார்: "அன்பானவர்களே, கிறிஸ்துவின் ஆளுமைத்தன்மையினுடைய வனப்பையும் மகிமையையும் மனிதர்களுக்குள் மறுபடியும் உருவாக்குதல் என்பதே உள்ளாக வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவரின் நிறைவான நோக்கமாயிருந்தது. பரலோகத்தின் ரோஜா மலர்கள் பூமியில் இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், அதன் மொக்குகள் பரலோகத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்க வேண்டும்"[12] நமது வாழ்வில் "ஆவியின் கனிகள்" காணப்படும்படி, தேவனுடைய ஆவியானவருக்குப் பின்னால் நாம் நடக்கத் தேவன் நமக்கு உதவுவாராக!

*இந்தப் பாடத்தை நான் முடிக்கும் இவ்வேளையில் எச்சரிக்கை வார்த்தை யொன்று முறையானதாக உள்ளது. சிலர் குமாரனுக்குக் கவனம் செலுத்துவதைக் காட்டிலும் அதிகமாகப் பரிசுத்த ஆவியானவருக்குக் கவனம் செலுத்துமளவுக்கு, பரிசுத்த ஆவியானவர் மற்றும் அவரது கிரியை ஆகியவற்றில் தங்கள் மனதை முழுவதும் ஈடுபடுத்திக்கொள்கின்றனர். இது நிச்சயமாகவே, ஆவியானவரைத் துக்கப்படுத்துவதாக இருக்கவேண்டும். பரிசுத்த ஆவியானவர் வேதாகமத்தை ஏவியபோது, அவர் தம்மைப்பற்றி வெளிப்படுத்துதல் என்பது அவரது நோக்க மாக இருக்கவில்லை. இயேசு, "... சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக்குறித்துச் சாட்சி கொடுப்பார்" என்று கூறினார் (யோவான் 15:26). பவுல், "பரிசுத்த ஆவியையும் அவருடைய ஊழியத்தையுமே அன்றி வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்" என்று கூறவில்லை. மாறாக அவர், "இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப் பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்தேன்" என்றே கூறினார் (1 கொரிந்தியர் 2:2). அப்போஸ்தலர், "நானோ பரிசுத்த ஆவியானவரின் ஊழியத்தைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக" என்று கூறவில்லை. மாறாக அவர், "நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தே யல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக" என்றே கூறினார் (கலாத்தியர் 6:14அ). ஆவியானவரைக் குறித்தும் அவருடைய ஊழியத்தைக் குறித்தும் நம்மால் முடிந்ததை நாம் கற்றுக்கொள்வோமாக, ஆனால் நாம் இயேசுவைப் பின்பற்றுவதற்கும் நம்மைத் தேவனிடத்தில் நெருங்கக் கொண்டுசேர்ப்பதற்கும் உதவிசெய்யவே நமக்கு ஆவியானவர் அருளப்பட்டுள்ளார் என்ற உண்மையின்மீதான பார்வையை நாம் இழந்துவிடா திருப்போமாக.*

## பிரசங்கியார்கள் மற்றும் போதகர்களுக்கான குறிப்புகள்

*நீங்கள் இந்தப் பிரசங்கத்தைப் பயன்படுத்தும்போது, "இயேசுவைப் பின்பற்றுதல்" __எவ்வாறு__ என்பதுபற்றிப் பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தி யுள்ளவற்றை உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு கூறுங்கள் (மத்தேயு 16:24; யோவான் 14:15; மாற்கு 16:16; மத்தேயு 24:13).*

---

*குறிப்புகள்*

*[1]இயேசு இந்த பூமியில் அப்போஸ்தலர்களுடன் இருந்தபோது அவரே அவர்களுக்குத் தேற்றரவாளனாக இருந்தபடியால் அவர் இவ்விடத்தில் "வேறொரு தேற்றரவாளன்" என்று கூறினார். [2]இந்தப் புத்தகத்தில் முன்னதாகக் காணப்படும் "மாம்சம் எதிர். ஆவி (8:5-13)" என்ற பாடத்தில் நடபடிகள் 2:38ன் மீதான விளக்கங்களை மறுகண்ணோட்டமிடவும். [3]இந்தப்புத்தகத்தில் முன்னதாகக் காணப்படும் "மாம்சம் எதிர். ஆவி (8:5-13)" என்ற பாடத்தில், ரோமர் 8:9ன் மீதான விளக்கங்களைக் காணவும்.* [4]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 190. [5]J. Behm, "*arrabon,*" in Geoffrey W. Bromiley, *Theological Dictionary of the New Testament,* ed. Gerhard Kittel and Gerhard Friedrich,

trans. Geoffrey W. Bromiley, abr. (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 80. [6]*இந்தக் கண்ணோட்டம், ஆக்லஹாமா கிறிஸ்தவக் கல்லூரியில் (இப்போது ஆக்லஹாமா கிறிஸ்தவப் பல்கலைக் கழகம்) வேதாகமத் துறையின் தலைவரான ரெய்மன்ட் கெல்சி என்பவரால் பற்றிக் கொள்ளப்பட்டிருந்தது. இது* J. W. McGarvey and Philip Y. Pendleton, *Thessalonians, Corinthians, Galatians and Romans* (Cincinnati: Standard Publishing, n.d.), 359 *என்ற புத்தகத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது.* [7]H. Leo Boles, *The Holy Spirit: His Personality, Nature, Works* (Nashville: Gospel Advocate Co., 1942), 51-53. [8]*ரோமர் 8:28 பின்வரும் பாடங்களில் கலந்துரையாடப்படும்.* [9]*1 தெசலோனிக்கேயர் 5:19 வசனமானது, அற்புதமான மற்றும் அற்புதமற்ற நடவடிக்கைகள் இரண்டையும் குறிக்கும் சந்தர்ப்பப்பொருளில் உள்ளது. முதல் நூற்றாண்டில், "ஆவியை அணைத்து" போடாதிருக்கும்படிக்குப் புத்திகூறுதல் என்பது "ஆவியின் அசாதாரண வரத்தை" கொண்டிருந்தவருக்கும் அல்லது "சாதாரண வரத்தை" கொண்டிருந்தவருக்கும் நடைமுறைப்படுத்தப்பட்டது.* [10]McGarvey and Pendleton, 360.

[11]*அவிசுவாசியொருவர், கலாத்தியர் 5:22, 23ல் குறிப்பிடப்பட்டுள்ள பண்புகளில் சிலவற்றைக் கொண்டிருக்க சாத்தியக்கூறு உள்ளது என்பதால் இவ்விடத்தில் "தேவனுடைய பிள்ளையாக இருக்கிற ஒருவர்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், குறைந்தபட்சம் இந்தப் பண்புகளை மேம்படுத்தும் செயல்முறையாவது கொண்டிராத தேவனுடைய பிள்ளை, "ஆவியானவரால் நிரப்பப்படுதல்" சாத்தியமல்ல.* [12]George Bailey, lecture presented at Central Christian College, Bartlesville, Oklahoma (now Oklahoma Christian University, located in Oklahoma City).